1974 மார்ச் 28]

பிரமனூர் பழையனூர் கால்வாய்களை இணைத்தல்

651. வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூருக்குச் செல்லும் கால்வாயை திருப்புவனம் நகரத்தின் அருகாமையில் செல்லும் பழையனூர் கால்வாயோடு சேர்க்கும் உத்தேசம் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

பட்டவர்த்தி—குறிச்சி புலவனூர் சாலை

652. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் பட்டவர்த்தியிலிருந்து குறிச்சி புலவனூர் வரை உள்ள சாலையை அரசினர் நெடுஞ்சாலைத்துறை எப்பொழுது மேற்கொள்ளும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சாலை ஏற்கெனவே ஒரு அரசு சாலையாகும். ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

Assignment of lands in Dharmapuri

* 653 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) whether it is a fact that a vast extent of cultivable waste lands in Dharmapuri had been recently assigned to Scheduled Caste people; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தர்மபுரி மாவட்டத்தில் ஏப்ரல் 73-லிருந்து ஜனவரி 74 வரை 299.21 ஏக்கர் பரப்பளவு விவசாய தரிசு நிலம் 160 அரிசனங்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. என். கே. பழனிசாமி : சார், வெறும் பூமி மட்டும்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை வைத்து அவர்கள் விவசாயம் செய்யமுடியவில்லை. ஆகவே, அவர்கள் விவசாயம் செய்வதற்கு உதவியாக சர்க்காரே கூட்டுறவுத் துறை அல்லது வேறு துறை மூலமாக கடன்கள் கொடுத்து, கிணறு வெட்ட மற்றும் வேறு காரியங்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, என்னுடைய இலாகாவின் பொறுப்பு பட்டா கொடுப்பதுதான். கடன் கொடுக்கும் பொறுப்பு கூட்டுறவுத் துறை அமைச்சருடையது, அவரைக் கேட்க வேண்டும். அப்படி ஒரு திட்டம் இருந்தால் நிச்சயமாக கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, as per revenue records there appears to be a lot of poramboke lands in Dharmapuri district but actually most of the lands are being cultivated by poor people who have not been given pattas. So, may I know from the Hon. Minister whether he will take action to see that pattas are given to them early

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The target fixed for the assignment of lands during 1973-74 is 9,000 acres. Upto the end of January 1974 a total extent of 3,186 acres have been assigned and out of this, 299.21 acres have been assigned to Harijans. The rest of the lands will be assigned in due course.

THIRU B. VENKATASWAMY : Sir, most of the lands which have been cultivated by the poor people for the last 30 or 40 years have not been assigned in Dharmapuri district, especially in the Anjati firka. They have represented to me that they have not been assigned to them. So, may I know from the Hon. Minister whether he will take steps to assign them at least in the Anjati firka?

THE HON THIRU S. J. SADIQ PASHA : My hon Friend can bring it to the notice of the District Collector and he will certainly look into the representation made in this regard.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழக அரசு ஏழைகளுக்கு பட்டா செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் பல பகுதிகளில் அவை களை கிராமக்கணக்கில் எழுதவில்லை. ஆகவே, அந்த அரிசனங்களுக்கு

1974 மார்ச் 28]

எல்லாம் நிலவள வங்கி மூலமாகக் கடன் கிடைக்கவில்லை. எனவே பட்டா செய்து தருகிறபோதே உடனடியாக அந்தக் கிராமக்கணக்கில் அவற்றை எழுதச் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டதாக அறிகிறேன். ஏதாவது தவறு இருக்குமானால் நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் ஸ்டேட் பாங்கியில் இதுபோன்ற பட்டா செய்து கொடுத்த பூமியின் மீது கடன் தருவது இல்லை என்று சொல்கிறார்கள். மதுரை மாவட்டத்திலிருந்து அத்தகைய குறிப்பு வந்திருக்கிறது. அவைகளைப் பரிசீலித்து, ஸ்டேட் பாங்க் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கும்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு நிலம் கொடுக்கிறபோது, இந்தச் சமுதாயக் கிணறுகள் என்று நம் அரசாங்கத்தின் நடைமுறையில் இருக்கிறதே, அதுமாதிரியாவது கட்டித் தர அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாவில் குறைந்தபட்சம் ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு வழங்கப்பட்டது, உயர்ந்தது எவ்வளவு வழங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கென விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளைப் பின்பற்றி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, தமிழக அரசு ஏழை எளிய மக்களுக்காக பட்டா வழங்குகிறது. அதை பணக்காரர்கள் பார்த்துக்கொண்டே இருந்து அந்த நிலங்களைக் கையெழுத்து வாங்கி எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். அப்படி அரசாங்கத்தால் பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலங்களை ஏழை எளியவர்கள் இத்தனை நாளைக்கு விற்கக்கூடாது, வாங்கக்கூடாது என்று ஒரு சட்டத்தை அரசு இயற்ற ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ஏற்கனவே அப்படி விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட ஆண்டு வரையில் அதை பாரதீனம் செய்யக்கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் எங்காவது இப்படி இருக்கிறது என்று புகார் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்படி எல்லா மாவட்டங்களிலும் அரிசனங்களுக்கு மாத்திரம் இல்லாமல், மனைப்பட்டாக்கள் இல்லாத ஏழை எளியவர்களுக்கும் மனைப்பட்டா வழங்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறதே, அதற்கு தீவிர நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது நிலம் கொடுக்கிற பிரச்னை பற்றியதாகும். வீட்டு மனை பற்றி ஹவுசிங் போர்டு மினிஸ்டரிடத்தில் கேள்வி கேட்க வேண்டும். ஏற்கனவே இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ரூரல் ஹவுஸ்லெஸ் புவர் மக்களுக்கு உதவி செய்யப் படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி வீட்டு வசதி வாரியத் தலைவரைக் கேட்டால் ஒரு விவரம் தருவார்கள். இன்று மானியத்தில் கூடத் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

வக்பு வாரியத்தின் கீழுள்ள மசூதிகள்

*654வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வக்பு வாரியத்தின் கண்காணிப்பில் 1972-ம் ஆண்டு முடிய உள்ள மசூதிகள் எத்தனை?

(இ) அவற்றின் மூலம் வாரியம் பெறும் மொத்த வருவாய் எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 2,235.

(இ) ரூ. 2,28,569.18 (ஓராண்டிற்கு).

திரு. மா. பா. சாரதி: தலைவரவர்களே, இந்து சமுதாயத்திற்கும் இஸ்லாமிய சமுதாயத்திற்கு இம்மாதிரி வாரியங்கள் இருப்பது போல், கிருஸ்துவ சமுதாயத்திற்கும் உள்ள அறநிலையங்களைப் பாதுகாக்க இம்மாதிரி வாரியங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா?